DINAKARAN

PAGE NO: 12 DATE: 15.09.2023

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# மனித சுற்றுச்சூழல் மீதான 2 நாள் தேசிய கருத்தரங்கம்



புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் மனித சுற்றுச்சூழல் மீதான ஐ.நா. மாநாட்டின் தேசிய கருத்தரங்கில் துணை வேந்தர் குர்மீத் சிங் பேசினார்.

**புதுச்சேரி, செப். 15:** மனித சுற்றுச்சூழல் மீதான ஐ.நா. மாநாட்டின் 50 ஆண்டுகள் தேசிய கருத்தரங்கு-1972யையொட்டி, இந்தியாவின் பயணம் மற்றும் முன்னோக்கி மதிப்பிடுதல் என்ற தலைப்பில் ஐசிஎஸ்எஸ்ஆர் பங்களிப்பில் 2 நாள் தேசிய கருத்தரங்கு புதுவை பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கை புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங் துவக்கி வைத்தார். அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வு துறைத்தலைவர் டாக்டர். நந்த கிஷோர் வரவேற்றார். டாக்டர் ரிச்சா திவாரி தொகுத்து வழங்கினார். வனவிலங்கு நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் டாக்டர் சங்கர், சமூக அறிவியல் மற்றும்சர்வதேச ஆய்வுகளின் புல முதன்மையர் மொகந்தி ஆகியோர் கலந்து கொண்டனர். டாக்டர்.ரித்தேஷ் ராய் நன்றியுரை வழங்கினார்.

அடுத்த 2 நாட்களில் நடைபெறும் மாநாட்டில் காலநிலை மாற்றத்தின் அறிவியல், காலநிலையின் சமூகவியல் அம்சம் மற்றும் காலநிலை மாற்றத்தின் நிதி தாக்கம் குறித்து விவாதிக்கப்படவுள்ளது. இளம் அறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் 6 தொழில்நுட்ப அமர்வுகளில் தங்கள் விளக்கக்காட்சியை வழங்கவுள்ளார். மேலும் மாநாட்டின் முடிவுகள் கொள்கை வகுப்பாளர்களுக்காக தொகுக்கப்பட்டு பல்வேறு அமைச்சகங்களுக்கு அனுப்பப்படவுள்ளது. இந்த முழு மாநாட்டையும் அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் துறையின் இணை பேராசிரியர் டாக்டர்.சஞ்சய் ஷர்மா ஏற்பாடு செய்துள்ளார்.

DINAMALAR

PAGE NO: 04

DATE: 15.09.2023

# புதுச்சேரி பல்கலையில் 2 நாள் தேசிய கருத்தரங்கு



■ புதுச்சேரி பல்கலையில் நேற்று துவங்கிய இரண்டு நாள் தேசிய கருத்தரங்கில் துணைவேந்தர் குர்மீத் சிங் பேசினார்.

**புதுச்சேரி, செப். 15–**

புதுச்சேரி பல்கலையில், 'ஐ.நா.மாநாட்டின் இந்தியாவின் பயணம் மற்றும் முன்னோக்கி மதிப்பிடுதல்' தலைப்பிலான இரண்டு நாள் தேசிய கருத்தரங்கு நேற்று துவங்கியது.

துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கி, கருத்தரங்கை துவக்கி வைத்தார். டாக்டர் நந்தா வரவேற்றார். வனவிலங்கு நிறுவன முன்னாள் இயக்குனர் சங்கர், சமூக அறிவியல் துறை பேராசிரியர் மொகந்தி, அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுத்துறை தலைவர் நந்தகிஷோர் பேசினர். நிகழ்ச்சியை ரித்தேஷ் ராய் மற்றும் ரிச்சா திவாரி தொகுத்து வழங்கினர்.

துணை வேந்தர் குர்மீத் சிங் பேசுகையில், இந்தியா மற்றும் உலகின் நாடுகள் எதிர்கொள்ளும் சமகால சுற்றுச்சூழல் சவால்களை குறித்தும், காலநிலை மாற்றங்களை சமாளிக்க இந்தியாவில் கொள்கைகளை உருவாக்குவதற்கான பகுத்தறிவை உருவாக்க வேண்டும் என்றார்.

கருத்தரங்கில் காலநிலை மாற்றம் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

காலநிலை மாற்றத்தின அறிவியல், சமூகவியல் அம்சம், காலநிலை மாற்றத்தின் நிதி தாக்கம் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. ஏற்பாடுகளை இணைப் பேராசிரியர் சஞ்சய் சர்மா செய்துள்ளார்.